முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணப்ப நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.07.2022**, வெள்ளிக்கிழமை

1. பாவகரும வினை போக்கி
   பண்பான மக்கள் படையை
   அவனியெங்கும் உருவாக்கியே
   அழியாமை தரும் மகா சக்தியாக
2. சக்தியாக வந்த அரங்கனே
   சற்குருவே உன்பெருமை கூறி
   சக்திமிகு சுபகிருது மிதுனதிங்கள்
   சாற்றிடுவேன் அறுநான்கு திகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 24 நாள், 08.07.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அருளாசி தன்னை
   வழங்குவேன் கண்ணப்ப நாயனாரும்
   சோரமிலா ஞானவான்கள் படை
   செகமெல்லாம் பெருக உரைப்பேன்
4. உரைக்கவே தயவு நிறைந்த
   உழைப்பு உண்மை கொண்ட
   குறைவிலா மானுட சமூகம்
   குவலயமெங்கிலும் அமைய
5. அமைய மனிதனை வழிநடத்தும்
   ஆற்றல் மிக்க குருமார்க்கம்
   அமைந்தால் பேருலகம்தனில்
   அற்புதம் நிகழும் எனக்கருதி
6. கருதியே முருகப் பெருமானும்
   கருணையே வடிவான அரங்கனை
   குருவாக உலகுக்கு அறிமுகமாக்கி
   குருமார்க்கமெனும் உயர் மார்க்கம்
7. உயர்மார்க்கம் சன்மார்க்கத்தை
   உயிர்கொலை நீக்கும் திருமார்க்கத்தை
   தயவாகப் படைத்து அருளிவர
   தானாக உலகோர் இதன் வழி
8. வழிதனில் வந்து இணைந்து
   வழிமொழிந்து மற்றவர்க்கும்
   அழியாமை கிட்டும்படி சடுதி
   அனுகி அரங்கனுள் ஞான
9. ஞானமார்க்கம் தனை பயில
   ஞான வேலிக்குள் வர
   ஞானவான்கள் எனும் படை
   நாளும்நாளும் உலகினில் பெருகி

10. பெருகியே பாதுகாப்பை தரும்
பிரளயம் பேரிடரையே வெல்லும்
முருகப்பெருமான் சக்தி பரவி
முழுமைபட ஞான ஆட்சிக்காலம்

11. காலம் கனியும் பேருலகில்
கந்தப்பெருமான் ஆளுமையாக
காலம் மாறும் ஞானயுகமாக
கண்ணப்பநாயனார் உரைத்த அருளாசி முற்றே

–சுபம்–